கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்:20.02.2025. அ.வ.எண் . 358/2021 வா.சா.1 . ராஜசிம்மன், த/பெ. முத்துசாமி

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 11ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளதாக கூறியுள்ள ஆவணங்களின் மூல ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை, தாவா சொத்துக்களை முத்துசாமி 3 கிரயப் பத்திரங்களின் மூலம்கிரயம் பெற்றுள்ளார் என்பதை என்னால் மறுக்க முடியுமா என்றால் அது பற்றி எனக்குவிவரம் தெரியாது. முத்துசாமிக்கு சொத்துக்கள் எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதை தெரியாமலேயே நான் தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. முத்துசாமிக்கு 3 கிரய ஆவணங்களின் மூலம் கிரயம் பெற்ற சொத்துக்கள் என்பதால் அது அவருடைய சுயார்ஜித சொத்துக்கள் என்றால் சரிதான். ராதாமணி எனக்கு என்ன உறவு என்றால் எனது தாயார் ஆவார். எனது தாயாரும், முத்துசாமியும் 1982 ம் ஆண்டிலிருந்தே தனியாக வசித்து வருவதாக எனது பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் 1984 ம் ஆண்டு ஆகும்.

2) எனது தாயாருக்கும், முத்துசாமிக்கும் 1983 ம் ஆண்டே இருவரும் ஒப்புக்கொண்டு விவாகரத்து பெற்றுவிட்டார்கள் என்றால் சரிதான், அதன்பின்னிட்டு முத்துசாமியை யார் கவனித்து வந்தார்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நானும் கவனிக்கவில்லை என்றால் சரிதான். முத்துசாமியை 2 முதல் 7 பிரதிவாதிகள் தான் கவனித்து வந்தார்கள் என்றால் அது பற்றி தெரியாது கடந்த 10 ஆண்டுகளாக நான் தான் பராமரித்து வருகிறேன். என்னுடன் வசித்து வருகிறாரா என்றால் இல்லை அவ்வப்போது சென்று பார்த்து வருவேன். எங்கு சென்று எனது அப்பாவை நான் பார்த்து வருவேன்

ஒப்பம்/- ( R. சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி

என்றால் எனது அப்பாவின் வீட்டிற்கு சென்று பார்த்து வருவேன். முத்துசாமிக்கு தாவா சொத்துக்கள் சுய சம்பாத்திய சொத்துக்கள் என்பதால் அவர் யாருக்கு வேண்டுமென்றாலும் சொத்தை எழுதிவைக்கலாம் என்றால் சரியல்ல.

3) எனது தாயார் 08.08.2017 ம் தேதியில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 4, 5 பிரதிவாதிகளுக்கு செட்டில்மெண்ட் 09.01.2012 ம் தேதியில் எழுதிவைக்கப்பட்டது என்றால் சரிதான், எனது தாயார் உயிருடன் இருந்த வரை மேற்கண்ட செட்டில்மெண்ட் செல்லாது என்றும் தாவா சொத்துக்களில் உரிமையுள்ளது என்றும் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது ஆனால் 2021 ம் ஆண்டு தான் 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்த விவரம் தெரியும். தாவா சொத்துக்களில் எனக்கு என்ன உரிமையுள்ளது என்றும் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் வாரிசு அல்லாத நபருக்கு எழுதிவைத்திருப்பதாக உள்ளதால் அந்த ஆவணங்கள் மோசடியாக ஏற்படுத்தப்பட்டவையாகும். முத்துசாமி உயிருடன் தான் உள்ளாரா என்றால் சரிதான்.

4) நான் எனது தகப்பனாரை பார்த்து செட்டில்மெண்ட் ரத்து செய்யுமாறு கேட்டதற்கு எல்லாமே 2 முதல் 7 பிரதிவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் தன்னால் எதுவும் செய்யமுடியாது என்று கூறிவிட்டார். எனது தகப்பனாரை சுதந்திரமாக செயல்பட விடாமல் 2 முதல் 7 பிரதிவாதிகள் அவர்களது கட்டுபாட்டில் வைத்துள்ளார்கள். எனது தகப்பனார் சார் ஆட்சியரிடமும் நீதிமன்றத்திலோ மனு ஏதேனும் கொடுத்தாரா என்றால் கொடுப்பதற்கு 2

ஒப்பம்/- ( R. சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி

முதல் 7 பிரதிவாதிகள் விடுவதில்லை, நான் அவ்வாறு சொல்வது தவறு என்றும் எனது தகப்பனார் வழக்கறிஞர் வைத்து எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

5) தாவா சொத்துக்கள் யாருடைய சுவாதீனத்தில் உள்ளது என்றால் பிரதிவாதிகளின் சுவாதீனத்தில் உள்ளது. மோசடியாக பட்டா பெற்றுஅனுபவித்து வருகிறார்கள். சுவாதீன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யாததால் வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 09.01.2012 ல் எழுதப்பட்ட செட்டில் மெண்ட் ஆவணத்தை 9 வருடங்கள் கழித்து தாவா தாக்கல் செய்துள்ளதால் கால வரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுஎன்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு சுயமாக பாத்தியப்பட்ட சொத்து என்பதால் அவர் யாருக்கு வேண்டுமென்றாலும் எழுதிகொடுக்க உரிமையுள்ளது என்றும் அதனடிப்படையில் 4,5 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை 11 ம் பிரதிவாதியிடம் அ டமானம் வைக்க உரிமையுள்ளது என்றால் சரியல்ல. விளம்புகை பரிகாரமும், சுவாதீன பரிகாரமும் கேட்காமல் நீதிமன்ற கட்டணம் செலுத்துவதை தவிர்ப்பதற்காக மேற்கண்ட பரிகாரங்கள் கேட்கவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்றமுத்திரை நான் தவறுதலாக செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

6) ராதாமணி வாரிசு என்று என்னை யாரேனும் மறுத்துள்ளார்களா என்றால் இல்லை. ஆனால் முத்துசாமிக்கு நான் வாரிசு இல்லை என்று 2 முதல் 7 பிரதிவாதிகள் மறுத்துவருகிறார்கள். ராதாமணிக்கு வாரிசு சான்றிதழ் பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். வாரிசு சான்றிதழில் 1ம் பிரதிவாதி வாரிசு என்று வந்துள்ளார் என்றால்

ஒப்பம்/- ( R. சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி

சரிதான். வாரிசு சான்றிதழ் பெற்றுவிட்ட நிலையில் 1ம் பிரதிவாதியின் சட்டப்படியான வாரிசு என்று விளம்புகை பரிகாரம் கேட்பதற்குவழக்குமூலம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>9,12 முதல் 15 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) அரசிற்கு எதிராக எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. நான் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றும் பரிகாரம் கேட்டுள்ளதாக பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அரசிற்கு எதிராக வழக்கு மூலமே வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் பட்டா மாறுதல் மோசடியாக பெற்றுள்ளார்கள் அதனை நீக்குவதற்காக பரிகாரம் கோரியுள்ளேன். அவ்வாறு எந்த வழக்குமூலமும் இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு வழக்குசொத்துக்கள் எவ்வாறு பாத்தியப்பட்டது என்று நான்குறிப்பிடவி்ல்லை என்றால் சரியல்ல. அதில் எனக்கு என்ன உரிமையுள்ளது என்று நான்கூறவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு வாரிசு இல்லாத நபர்களை செட்டில்மெண்ட் ஆவணங்களில் வாரிசுகள் என்று காண்பித்து மோசடியாக ஆவணங்கள் எழுதப்பட்டுள்ளது.

2) வா சா ஆ 8, 9, 10 ஆவணங்களில் தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் சுயார்ஜித சொத்துக்கள் என்றுதான் கண்டுள்ளது என்றும் அதன்பின்னிட்டு 07.04.2021ம் தேதி வா சா

ஒப்பம்/- ( R. சுஜாதா)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

ஆ 11 பிழைதிருத்தல் ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றும், வா சா ஆ 8 ல்குறிப்பிட்டுள்ள கிரயப்படி பாத்தியப்பட்ட சொத்தை பாகப்பிரிவினை மூலம் என்றும் வா சா ஆ 11ல் திருத்தல் செய்துள்ளார்கள் என்றால் மோசடி பத்திரங்கள் மூலமாக மீண்டும்மீண்டும் போலி ஆவணங்கள் ஏற்படுத்தியுள்ளார்கள் தாவா சொத்துக்கள் மூதாதையர் சொத்துக்கள் என்று குறிப்பிட்டு எனது வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 9ம் பிரதிவாதி சட்ட விதிகளுக்கு உட்பட்டு பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்களை அடிப்படையாக கொண்டு தான் வருவாய்துறை ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. முழுமையான எந்த விவரமும் கூறாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல. 9, 12 முதல் 15 பிரதிவாதிகளுக்குஎதிராக எந்த வழக்கு மூலமும் இல்லாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/- ( R. சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி